மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.03/2023
அ.வ.எண்.85/2017

முருகன் ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிராக/

அஞ்சலி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 14.12.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.கோகிலவாணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் கடந்த 11.04.2023 ம் தேதியில் இ.ம.எண்.03/2023 ல் மனுதாரருக்கு எதிராக தோன்றாதரப்பினராக உத்தரவானதை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :–

மனுதாரர்/2 பிரதிவாதியின் தந்தை 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதி கடந்த 20.01.2023 ம் தேதியில் இறந்துவிட்டார். இந்நிலையில் மனுதாரரின் வழக்கறிஞர் வழக்கு விவரங்களை மனுதாரருக்கு கூறாமலும், அவர் வழக்கில் மனுதாரர் சார்பாக ஆஜராகாமல் இருந்த விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்காததாலும், வழக்கை பற்றிய விவரங்கள் மனுதாரருக்கு தெரியவில்லை. பின்னிட்டு வேறொரு வழக்கறிஞரின் மூலம் விவரங்கள் கேட்டபோதுதான் கடந்த 11.04.2023 ம் தேதியில் மனுதாரருக்கும், அவரது தந்தை 1ம் பிரதிவாதிக்கும் எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட

விவரம் மனுதாரருக்கு தெரிய வந்தது. அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி இறந்த சங்கதிகளை தெரிவிக்கப்படாததால், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளதால் கடந்த 11.04.2023 ம் தேதியில் மனுதாரருக்கும், அவரது தந்தையான 1 ம் பிரதிவாதிக்கும் எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. இம்மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் கடந்த 11.04.2023 ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யகோரி கொடுத்த மனு தவறானதாகும். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானதாகும். கடந்த 13.06.2013 ம் தேதியிலேயே மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1, 3 பிரதிவாதிகள் மட்டுமே பதிலுரை தாக்கல் செய்து வழக்காடி வருகின்றனர். மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோருகிறாரா அல்லது இடைநிலைமனுவில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோருகிறாரா என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை. மனுதாரரின் தந்தை இறந்தததை அடுத்து இந்நீதிமன்றத்தில் உரிய முறையில் மனு தாக்கல் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. துர்லாபம் அடையும் எண்ணத்தில் தவறான தகவல்களுடன் மனுதரார் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், செலவுத்தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

மனுதாரர் தரப்பில் மனுதாரர்/2 பிரதிவாதியின் தந்தை 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதி கடந்த 20.01.2023ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் மனுதாரரின் வழக்கறிஞர் வழக்கு விவரங்களை மனுதாரருக்கு கூறவில்லை என்றும், அவர் வழக்கில் மனுதாரர் சார்பாக ஆஜராகாமல் இருந்த விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை என்றும். வழக்கை பற்றிய விவரங்கள் மனுதாரருக்கு தெரியவில்லை என்றும், பின்னிட்டு வேறொரு வழக்கறிஞரின் மூலம் விவரங்கள் கேட்டபோதுதான் கடந்த 11.04.2023ம் தேதியில் மனுதாரருக்கும், அவரது தந்தை 1ம் பிரதிவாதிக்கும் எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி இறந்த சங்கதிகளை தெரிவிக்கப்படாததால், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளதால் கடந்த 11.04.2023ம் தேதியில் மனுதாரருக்கும், அவரது தந்தையான 1ம் பிரதிவாதிக்கும் எதிராக பிறபிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கடந்த 11.04.2023ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யகோரி கொடுத்த மனு தவறானது என்றும், மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானது என்றும், கடந்த 13.06.2013ம் தேதியிலேயே மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், 1, 3 பிரதிவாதிகள் மட்டுமே பதிலுரை தாக்கல் செய்து வழக்காடி வருகின்றனர் என்றும், மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோருகிறாரா அல்லது இடைநிலைமனுவில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோருகிறாரா என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றும், மனுதாரரின் தந்தை இறந்தததை அடுத்து இந்நீதிமன்றத்தில் உரிய முறையில் மனு தாக்கல் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், துர்லாபம் அடையும்

எண்ணத்தில் தவறான தகவல்களுடன் மனுதரார் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், செலவுத்தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால், மனுதாரர் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் வழக்கு நிலுவையிலிருக்கும் பொழுது 1ம் பிரதிவாதி கடந்த 20.01.2023ம் தேதியில் இறந்துவிட்டதால் அவரது வாரிசுதாரர்கள் ஏற்கனவே வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக இருந்து வருவதால், வழக்குரையில் தேவையான திருத்தங்கள் மட்டும் செய்துகொள்ள அனுமதிக்கமாறு கோரி எதிர்மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.5/2023 தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு வழக்குரையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் மனுதாரர் தரப்பில் மனுதாரரது முந்தைய வழக்கறிஞர் வழக்கு விவரங்கள் குறித்து மனுதாரருக்கு தெரிவிக்காத காரணத்தினால், மனுதாரரால் வழக்கில் ஆஜராக இயலவில்லை என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக கடந்த 11.04.2023ம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் வழக்கு கோப்பை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் ஆஜராகாத காரணத்தினால் கடந்த 19.04.2023ம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரரால் உ.வி.மு.ச.கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.2/2022லும், கடந்த 19.04.2023ம் தேதியில் தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) அவ்வாறுள்ள நிலையில் எதனடிப்படையில் மனுதாரர் தனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எதிராக கடந்த 11.04.2023ம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு

பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தனது மனு பிரமாண பத்திரிக்கையில் தெரிவித்துள்ளார் என்பது குறித்து மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் தரப்பினர்களே தங்களது வழக்கு நடவடிக்கைகள் குறித்தும், அவற்றின் நிலைகள் குறித்தும் தெரிந்துகொள்ளவேண்டிய பொறுப்பை உடையவர்கள் ஆவார்கள். வழக்கறிஞர் வழக்கை பற்றி கூறவில்லை என்பதால், தங்களது வழக்கை பற்றி தங்களுக்கு தெரியவில்லையென தரப்பினர்கள் கூறும் காரணம் ஏற்கத்தக்கதல்ல. இருப்பினும் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், அதற்கு பின்னிட்டு பழைய வழக்கறிஞர் தங்களுக்காக ஆஜராகவில்லை என்பதை தங்களிடம் தெரிவிக்கவில்லை எனவும், மனுதாரர் தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் மனுதாரர் தனது எதிர்வாதத்தை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கவேண்டும் என்ற அடிப்படையிலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) அதே சமயத்தில் இறந்த 1ம்பிரதிவாதிக்கு எதிரான ஒருதலைபட்ச உத்தரவை மனுதாரர் ரத்து செய்ய கோரியுள்ளதை கருத்தில் கொள்கையில், இறந்த நபருக்கு வழக்கு அற்றுபோய்விட்ட நிலையில் அவருக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு பயனற்றது (Infructuous) என்பதால் மேற்படி 1ம் பிரதிவாதிக்கெதிரான ஒருதலைபட்ச உத்தரவை தனியாக ரத்து செய்வதற்கான அவசியம் எதுவும் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் வழக்கு நடவடிக்கைகளிலும், எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரருக்கு ரூ.1500/−ஐ செலவுத் தொகையாக அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ.1500/−செலவுத்தொகையாக 10.01.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 10.01.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.01.02 17:20:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.01.02 17:20:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.